# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

**********

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032**
**முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),**
**முறையீட்டு மனு எண்.55/2019/பே.1**
**ஆணை நாள்: 13-02-2020.**

திரு.ஆர்.ராமமூர்த்தி,
பஞ்சாயத்து காலனி,
அருந்ததியர் தெரு,
பாலக்கோடு
தருமபுரி மாவட்டம்–636808 -- முறையீட்டு மனுதாரர்.

செயல்அலுவலர்,
தேன்கனிக்கோட்டை பேரூராட்சி,
கிருஷ்ணகிரி மாவட்டம். -- எதிர் மனுதாரர்.

**ஆணை.**

தருமபுரி மாவட்டம், பாலக்கோடு பஞ்சாயத்து காலனி, அருந்ததியர் தெருவினைச் சேர்ந்த திரு.ஆர்.ராமமூர்த்தி என்பவரது 20.03.2018 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 21.03.2018ல் பெறப்பட்டு, முறையீட்டு மனு எண்.49 /2018 என எண்ணிடப்பட்டது. முறையீட்டு மனு மீதான அறிக்கைகள் பெறப்பட்டு, விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

முறையீட்டு மனுதாரர் தனது முறையீட்டு மனுவில் கிருஷ்ணகிரி மாவட்டம், தேன்கனிக்கோட்டை பேரூராட்சியில் காலியாக உள்ள துப்புரவு பணியாளர்கள் பணியிடங்களை நிரப்பிட உள்ளூர் நபர்கள் பட்டியல் கோரி மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்திற்கு மனு அனுப்பிய நிலையில், உள்ளூர் நபர்களை பணியமர்த்தாமல் வெளியூரில் வசிக்கும் நபர்களை பணி நியமனம் செய்ததாகவும், மேலும் பணி நியமனங்கள் உரிய விதிமுறைகளின்படி மேற்கொள்ளப்படவில்லை எனவும், பணி நியமனம் மேற்கொண்டதில் முறைகேடு நடைபெற்றுள்ளதாக தேன்கனிக்கோட்டை பேரூராட்சி செயல் அலுவலர் மீது புகார்கள் தெரிவித்து விசாரணை கோரி தனது முறையீட்டு மனுவினை சமர்ப்பித்துள்ளார்.

11.04.2018 நாளிட்ட தேன்கனிக்கோட்டை பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கையில் கிருஷ்ணகிரி பேரூராட்சியில் காலியாக உள்ள 4 துப்புரவு பணியாளர் பணியிடங்களுக்கு மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்திற்கு உள்ளூர் பகுதியில் உள்ள தகுதி வாய்ந்த நபர்களை அனுப்பி வைக்க கோரி 06.01.2017ல் கருத்துரு அனுப்பி வைக்கப்பட்டதாகவும், அதன் முலம் 17.04.2017ல் மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்தில் இருந்து பெறப்பட்ட 5 நபர்கள் கொண்ட பட்டியல், மற்றும் நாளிதழ்களில் வெளியிடப்பட்ட விளம்பரத்தின் அடிப்படையில் விண்ணப்பித்திருந்த 3 நபர்களையும் சேர்த்து 8 நபர்களுக்கு 25.05.2017ல் நேர்காணல் நடத்தி, 25.05.2017 அன்றே பேரூராட்சி நியமனக்குழு மூலம் தகுதி வாய்ந்த நபர்கள் பணியமர்த்தப்பட்டதாகவும், இதில் விதி மீறல்கள் ஏதும் இல்லை எனவும் தெரிவித்து வரப்பெற்ற அறிக்கை இம்முறைமன்ற நடுவத்தால் பரிசீலிக்கப்பட்டது.

முறையீட்டு மனு தொடர்பாக 27.06.2018 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜரான முறையீட்டு மனுதாரர் திரு.ஆர்.இராமமூர்த்தி தனது வாக்குமூலத்தில், தேன்கனிக்கோட்டை பேரூராட்சியில் துப்புரவு பணியாளராக பணியமர்த்தப்பட்டுள்ள திருமதி .லட்சுமி என்பவர் தெலுங்கு படித்துள்ளதாகவும், பின் தங்கிய

வகுப்பினரான இவர் பணி நியமனத்தின்போது 38 வயது நிரம்பியவர் எனவும், அரசாணையின்படி பின்
தங்கிய வகுப்பினருக்கு 32 வயது எனவும், மற்றொரு துப்புரவு பணியாளரான திரு.ராஜாராம் என்பவரும்
தமிழ் மொழியில் பயிலவில்லை எனவும், இவரும் அரசு விதிகளின்படி பணியமைப்பிற்கான வயதினை
கடந்து 34 வயது நிரம்பியவர் எனவும், திருமதி மஞ்சு மற்றும் திரு சிவசக்தி ஆகியோர் தேன்கனிக்கோட்டை
பேரூராட்சி பகுதியினை சார்ந்தவர்கள் அல்ல எனவும், உள்ளூர் பகுதியில் பல நபர்கள் இருந்து அவர்களை
பணிநியமனம் செய்யாமல் வெளியூர் நபர்களை பணி நியமனம் செய்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

27.06.2018 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜரான தேன்கனிக்கோட்டை பேரூராட்சி செயல்
அலுவலர் தனது வாக்குமூலத்தில் முறையீட்டு மனுதாரரின் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ள
திருமதி. லட்சுமி மற்றும் திருமதி. மஞ்சு ஆகியோர் ஆதரவற்ற விதவைகள் ஒதுக்கீட்டில் இருந்து தெரிவு
செய்யப்பட்டதாகவும், அவர்களுக்கு பணி நியமனத்தில் 35 வயது வரை தகுதியுள்ளதாகவும், துப்புரவு
பணியாளர் பணி நியமனத்திற்கு தமிழில் எழுத படிக்கத் தெரிந்தவர்கள் என மட்டுமே விளம்பரம்
செய்யப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார். திரு ராஜாராம் என்பவர் மாற்றுத் திறனாளி என்பதாலும் அவர்
பிறந்த தேதி 10.07.1982 என்றும், இவர் பிற்பட்ட வகுப்பினை சார்ந்தவர் என்பதால் பணி நியமனத்திற்கு
32 வயது எனவும், இவர் மாற்றுத் திறனாளி என்பதால் கூடுதலாக 10 ஆண்டுகள் வயது தளர்வு உண்டு
என்பதால் இவரை பணி நியமனம் செய்ததாகவும் தெரிவித்துள்ளார். மேலும் மற்ற நியமனங்கள் யாவும் உரிய
விதிமுறைகளை பின்பற்றி நியமனக்குழுவின் மூலம் மேற்கொள்ளப்பட்டதாகவும், முறைகேடு ஏதும் இல்லை
எனவும் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். பணி நியமனம் செய்யப்படும் நபர்கள் பேரூராட்சி
எல்லைப் பகுதியில் வசிக்கவேண்டும் என எந்த விதிகளும் இல்லை எனவும், முறையீட்டு மனுதாரரின் மகள்,
தான் பொறுப்பில் இருந்த கெலமங்கலம் பேரூராட்சியில் ஒப்பந்த அடிப்படையில் துப்புரவு பணியாளராக
பணிபுரிந்ததாகவும், கெலமங்கலம் பேரூராட்சியில் காலியாக உள்ள துப்புரவு பணியாளர் பணியிடத்தில்
அவரை பணி நியமனம் செய்ய முறையீட்டு மனுதாரர் தன்னைக் கோரியதாகவும், மேற்படி பணியிடம் இன
சுழற்சி முறையில் ஆதி திராவிடர் பிரிவிற்கு வருவதாலும், முறையீட்டு மனுதாரரின் மகள் மிகவும்
பிற்படுத்தப்பட்ட இனத்தை சேர்ந்தவர் என்பதால் இப்பணிக்கு அவரை நியமனம் மேற்கொள்ள இயலாத
நிலையிலும், மேலும் பல்வேறு சொந்தக் காரணங்களினாலும் தன் மீது முறையீட்டு மனுதாரரால் புகார் மனு
எழுதப்பட்டுள்ளதாக தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

இம்முறையீட்டு மனு தொடர்பாக 2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள்
முறைமன்ற நடுவர் சட்டம் பிரிவு 6(4) (a) ன் கீழ் உரிய புலன் விசாரணை அமைப்பின் 01.10.2019 நாளிட்ட
அறிக்கையும் பெறப்பட்டு பரிசீலிக்கப்பட்டது.

இந்நேர்வில் முறையீட்டு மனுதாரரின் முறையீட்டு மனு, முறையீட்டு மனு மீதான
தேன்கனிக்கோட்டை பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை, முறையீட்டு மனுதாரர் மற்றும்
தேன்கனிக்கோட்டை பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோர்களின் வாக்குமூலங்கள் மற்றும் இப்பொருள்
தொடர்பாக உரிய அமைப்பின் மூலம் பெறப்பட்ட அறிக்கை ஆகியன இம்முறைமன்ற நடுவத்தால்
கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. புகார் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ள பணி நியமனங்கள் யாவும் உரிய
முறையில் வேலை வாய்ப்பு அலுவலகம் மூலம் பட்டியல் பெறப்பட்டும், நாளிதழ்களில் விளம்பரங்கள்
மேற்கொண்டும் அதன் அடிப்படையில் நேர்காணல் நடத்தப்பட்டு உரிய விதிமுறைகளின்படி பணி
நியமனங்கள் பேரூராட்சி நியமனக்குழுவின் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்நிகழ்வில் முறையீட்டு
மனுதாரரால் தெரிவிக்கப்பட்டுள்ள புகார்கள் ஆதாரமற்றதாக உள்ளதோடு, முறையீட்டு மனுதாரரால் தனது
புகாருக்கான எவ்விதமான ஆதார ஆவணங்களும் அளிக்கப்படவில்லை என்பதால் முறையீட்டு மனுவினை
தள்ளுபடி செய்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2020–ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 13 –ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக
முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//–

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

–//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//–

செயலாளர்.

பெறுநர்
1.திரு.ஆர்.ராமமூர்த்தி,
பஞ்சாயத்து காலனி,
அருந்ததியர் தெரு,
பாலக்கோடு
தருமபுரி மாவட்டம்–636808.
2.செயல் அலுவலர்,
தேன்கனிக் கோட்டை பேரூராட்சி,
கிருஷ்ணகிரி மாவட்டம்.
3.பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
தருமபுரி மண்டலம்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
தருமபுரி.
நகல்
மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனி எழுத்தர்.
முறைமன்ற நடுவ செயலரின் தனி எழுத்தர்.
உதவிப் பிரிவு அலுவலர் (ஊராட்சிகள்)